பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 21 புதன்கிழமை 04.05.2022 கதிர் 73

## 7,000 பேர் மண்சரிவு அபாய வலயங்களில்

மண்சரிவு அபாயம் காணப்படும் பகுதிகளில் வசித்துவரும் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களைப் பாதுகாப்பான இடங்களில் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என்று தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பருவ மழையைக் ☞2

## பிரதி சபாநாயகர் தெரிவு நாளை!

### ஆளும் - எதிரணி பலப்பரீட்சை

நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்து கொண்டிருக்கும் நிலையில், பிரதி சபாநாயகரைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு நாளை நடைபெறவுள்ளது.

பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தனது பதவியை இராஜினாமா செய்து கொண்டார். அதனை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளார் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இன்று சபையில் அறிவித்தார். இந்நிலையிலேயே பிரதி சபாநாயகர் தெரிவுக்கான வாக்களிப்பு நாளை நடைபெறவுள்ளது என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

நெருக்கடிக்கு மத்தியில் வாக்கெடுப்பு இடம்பெறுவதால், எந்த அணிக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கின்றது என்பதை நாளை அறிந்துகொள்ள முடியும்.

## பிரதி சபாநாயகர் பதவிக்கு இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

### ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்



பிரதி சபாநாயகர் பதவிக்கு இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் பெயரை முன்மொழிவதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டம், கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இன்று நடைபெற்றது. இதன்போதே ☞2

# கோட்டாவுக்கு எதிரான பிரேரணை 11 கட்சிக் கூட்டணி ஆதரிக்காதாம்

## முடிவை அறிவித்தார் வாசுதேவ நாணயக்கார அரசுக்கு எதிரான பிரேரணக்கும் நிபந்தனை

கொழும்பு,மே 04

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்காமல் இருப்பதற்கு நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் 11 கட்சிகளின் கூட்டணி தீர்மானித்துள்ளது.

இந்த தகவலை ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்தாலும், அதனை நாடாளுமன்ற ஒழுங்கு புத்தகத்தில் உள்ளடக்குவது குறித்து சட்டரீதியலான சிக்கல் உள்ளமை உட்பட மேலும் சில காரணங்களை அடிப்படையாகக் கொண்டே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளதெனத் தெரியவருகின்றது. ☞2

## நாடாளுமன்றம் முன் ஆர்ப்பாட்டம்; இளைஞர், யுவதிகள் 12 பேர் கைது

நாடாளுமன்ற நுழைவாயிலுக்கு அருகே எதிர்ப்பில் ஈடுபட்டிருந்த இளைஞர், யுவதிகள் சிலர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 10 ஆண்களும், 2 பெண்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை - பொல்துவை சந்தியில் நாடாளுமன்ற வளாக நுழைவாயில் வீதியை இடைமறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். ☞2

## இந்தியாவுக்குச் செல்ல முயன்ற 14பேர் பேசாலைக் கடலில் கைது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.04

மன்னார் பேசாலைப் பகுதி கடல் ஊடாகத் தமிழகத்திற்குச் செல்ல முற்பட்டனர் எனக் கூறப்படும் 14 பேர் இன்று ☞2

## 12 கோடி ரூபா பெறுமதியான கேரளாக் கஞ்சா யாழில் மீட்பு



யாழ்ப்பாணம் கடற்பரப்பில் 12 கோடி 30 இலட்சம் ரூபா பெறுமதியான சுமார் 492 கிலோ கிராம் கேரளாக் ☞2

## யாழில் கிணற்றில் தவறி வீழ்ந்த 3 வயது பாலகன் பரிதாபச் சாவு!

வீட்டுக் கிணற்றில் தவறி வீழ்ந்த 3 வயது பாலகன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், ஊரெழு மேற்கில் நேற்று மாலை 4 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இரட்டையர்களில் ஒருவரான ☞2

## கச்சதீவை மீட்டெடுக்க இந்தியா நடவடிக்கை

### பா.ஜ.க. செயற்குழு உறுப்பினர் தெரிவிப்பு



கச்சதீவை மீட்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது எனப் பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழு ☞2

## சகல கிராம உத்தியோகத்தர்களும் சுகயீன விடுமுறைப் போராட்டத்தில்

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமற்றும் கிராம உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பனவற்றுக்குத் தீர்வு கோரி, கிராம உத்தியோகத்தர்கள் இன்று சுகயீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் செயலாளர் திராஜ் தல்பதாது இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடு முழுதுவதும் உள்ள கிராம ☞2

## கொக்கட்டிச்சோலையில் யானை தாக்கி ஒருவர் சாவு

கொக்கட்டிச்சோலை, சாமந்தியாறு பகுதியில் யானை தாக்கி ஒருவர் மரணமான சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கொக்கட்டிச்சோலை கிராமத்தினைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான வெள்ளத்தம்பி குமரகுரு (வயது 72) என்பவரே உயிரிழந்துள்ளார். ☞2

## நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் நாடாளுமன்றுக்கு வருவது தாமதம்

### மொழிபெயர்ப்புகளின் பின்தான் சபாநாயகர் முடிவு

கொழும்பு,மே04

ஜனாதிபதி மற்றும் அரசுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை நாடாளுமன்றில் எடுப்பது குறித்துத் தீர்மானிப்பதை சபாநாயகர் தள்ளிப் போட்டிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

மேற்படி இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளும் ஆங்கில மொழி மூல வாசகத்தில் அமைந்திருக்கின்றன எனக் கூறப்படுகிறது.

மூன்று மொழிகளிலும் அதன் ☞2

## நாடாளுமன்றம் முன் ஆர்ப்பாட்டம்; .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ ஜயவர்தனபுர - கோட்டே நாடாளுமன்ற வளாகத்துக்குள் நுழையும் பொல்துவ சந்தியிலிருந்து நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு செல்லும் பிரதான வீதி இன்று காலை வீதித்தடைகளால் மறிக்கப்பட்டிருந்த நிலையில் அவ்விடத்தில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இன்று காலை நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்த அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் நாடாளுமன்றத்துக்குப் பின்னாலுள்ள மாதிவெல நுழைவாயிலைப் பயன்படுத்தினர்.

அப்பகுதியிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நாடாளுமன்ற வளாகத்துக்குள் நுழைந்த அமைச்சர்கள்மற்றும்நாடாளுமன்றஉறுப்பினர்கள் பதாகைகளை ஏந்தியவாறு சிறிய எண்ணிக்கையிலானோர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

அத்துடன், பத்தரமுல்லை தியத்த உயனக்கு அருகில் பொல்துவ சந்தியில் இருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், அவ்விடத்தைக் கடந்து சென்ற அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதாகைகளை ஏந்தி எதிர்ப்பு தெரிவித்த நிலையில் அவ்விடத்துக்கு வந்த கலகமடக்கும் பொலிஸ் குழுவினருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

தாம் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதைத் தவிர வேறு எந்த செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவருடனான குழுவினர், ஆர்ப்பாட்டக்காரர்களைக் கைதுசெய்ய முயன்ற வேளையில் அமைதியின்மை ஏற்பட்டது.

கைதுசெய்யப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் 12 பேர் பொலிஸ் பஸ்ஸில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

## சகல கிராம ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகத்தர்களால் இந்தச் சுகயீன விடுமுறைப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

## கச்சதீவை மீட்டெடுக்க ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு தெற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் அலுவலகத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போது,அவர்இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் நலனில் பாரதிய ஜனதாக் கட்சி எப்போதும் அக்கறையுடன் செயல்படும்.

அதன் அடிப்படையில் கட்சியின் தமிழக மாநில தலைவர் அண்ணாமலை இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார் என்று சி.பி.ராதாகிருஷ்ணன் மேலும் கூறியுள்ளார்.

## கொக்கட்டிச்சோலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இரவு மூன்று யானைகள் இந்தப் பகுதிக்குள் நுழைந்து, வீட்டில் இருந்த மரங்களையும், பயிர்களையும் சேதப்படுத்திவிட்டு, மேற்படி வயோதிபரின் வீட்டின் முன்னால் உள்ள காணியில் உலாவியுள்ளது.

அச்சமயம் அவர் வீட்டை விட்டு வெளியில் சென்ற போது, யானை தாக்கியுள்ளது. இதில் சம்பவ இடத்திலேயே அவர் மரணமடைந்துள்ளார்.

## நம்பிக்கையில்லாப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொழிபெயர்ப்புடன் அதன் வாசக வடிவங்களைப் பெற்ற பின்னரே அவற்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது குறித்த தீர்மானத்தை சபாநாயகர் எடுப்பார் எனத் தெரிகின்றது.

இன்று காலை நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இதனை சபாநாயகர் கோடி காட்டினார் எனக் கூறப்பட்டது.

இந்தப் பிரேரணைகளை உடனடியாக நாடாளுமன்றத்தில் எடுப்பதற்காக நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தும் பிரேரணை ஒன்றை சமர்ப்பிப்பது குறித்து எதிர்க் கட்சிகள் இன்றைய கூட்டத்தில் பிரஸ்தாபித்தன எனத் தெரியவருகிறது.

எது,எப்படி என்றாலும் இந்த பிரேரணைகளின் தமிழ்,சிங்கள வடிவங்கள் மொழிபெயர்க்கப்பட்டு கிடைத்த பின்னர் அடுத்த கட்டம் குறித்து தீர்மானிக்கப்படும் என சபாநாயகர் கோடி காட்டினார் என்று அறிய வந்தது.

## 12 கோடி ரூபா பெறுமதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஞ்சாவைக் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் சந்தேகநபர் ஒருவரையும்பொலிஸார்கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கடற்பகுதியில் கடற்படையினர் இன்று காலை சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த படகு ஒன்றை வழிமறித்து சோதனையிட்டனர்.

அதன்போது படகில் 15 சாக்குகளில் 225 பொதிகளில் சுமார் 492 கிலோ கிராம் கேரளாக் கஞ்சாவை மீட்டுள்ளனர்.

அதையடுத்து படகோட்டியான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரையும் கைதுசெய்தனர்.

மீட்கப்பட்ட கஞ்சா மற்றும் படகையும், கைதுசெய்யப்பட்ட இளைஞரையும் சட்ட நடவடிக்கைக்காகப் பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளமையுடன் சந்தேகநபரையும் சான்றுப் பொருள்களையும் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கையும் எடுத்துள்ளனர்.

## யாழில் கிணற்றில் தவறி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிருஷ்ணகாந்தன் சித்தாத் (வயது 3) என்ற பாலகனே உயிரிழந்தார்.

இரட்டையர்கள் ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருந்துள்ளனர். அவர்களுக்குப் பிஸ்கட் கொடுத்துவிட்டு தாயார் தேநீர் தயாரிக்க சமையலறைக்குச் சென்றுள்ளார்.

மீள வந்து பார்த்தபோது பாலகன் ஒருவரைக் காணவில்லை. வீட்டு வளவில் தேடிய பின் கிணற்றைப் பார்த்தபோது பாலகன் கிணற்றில் தவறி வீழ்ந்தமை கண்டறியப்பட்டது.

உடனடியாக மீட்டு யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோதும் பாலகன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

கட்டுக் கிணற்றை சுற்றித் தகரத்தால் வேலியிடப்பட்டுள்ளது. அதில் ஏறிய போதே பாலகன் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்திருக்கலாம் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணையை மேற்கொண்டார்.

## இந்தியாவுக்குச் செல்ல .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாலை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்

கைது செய்யப்பட்ட 14 பேரில் 5 பெண்கள், 4 ஆண்கள் மற்றும் 5 சிறுவர்கள் உள் அடங்குகின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 14 பேரும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவிருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கோட்டாவுக்கு எதிரான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்தக்கட்ட அரசியல் நகர்வு தொடர்பில் ஆராய்வதற்காக 11 கட்சிகளின் கூட்டணியின் விசேட கூட்டமொன்று நேற்றிரவு இடம்பெற்றது.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

பிரதமர் பதவியை இராஜினாமா செய்வதற்கு மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளாரென நம்பகரமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளதால், அரசுக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையும் ஏற்புடையதாக அமைந்துவிடும்.

சிலவேளை, பஸிலின் நிகழ்ச்சி நிரலை ஏற்று, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக மறுத்தால், அரசுக்கு எதிரானநம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு மட்டும் ஆதரவாக வாக்களிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தேசிய இணக்கப்பாட்டு அரசுக்கு சஜித் தரப்பு இணக்கம் தெரிவித்தால் மாத்திரமே இதற்கான ஆதரவை முழுமையாக வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## பிரதி சபாநாயகர் பதவி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆளுங்கட்சியின் சார்பில் டிலான் பெரேரா களமிறக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

## 7,000 பேர் மண்சரிவு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்தில்கொண்டு மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள், மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆசிரி கருணாவர்தன தெரிவித்தார்.

இதனிடையே, மண்சரிவு ஏற்படும் அபாயம் காணப்படும் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பலத்த மழையுடனான காலநிலை தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக முறையான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## நாளை அமிலச் சோதனை

பிரதி சபாநாயகர் தெரிவு பற்றிய விவகாரம் ஒரு நாள் தள்ளிப் போடப்பட்டிருக்கின்றது.

இது விடயத்தில் சபாநாயகரின் முடிவே இறுதியானது என்றாலும், அது நாடாளுமன்ற சம்பிரதாயங்கள், முறைமைகளுக்கு அமைவானதா என்ற கேள்வி எழாமல் இல்லை.

சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தலைவர் ஆகிய பதவி நிலைகளில் வெற்றிடம் ஏற்படுமானால் அதை நிரப்புவதுதான் நாடாளுமன்றத்தின் முதல் நிகழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதே நாடாளுமன்ற ஒழுங்கு முறையாகும்.

அத்தகைய தெரிவு ஒன்றை – அதுவும் இரகசிய வாக்கெடுப்பு மூலமான தேர்வு ஒன்றை – அதிரடியாக எதிர்கொள்வது ஆளும் தரப்புக்கு அரசியல் ரீதியில் நெருக்கடியானது என்று கருதப்படும் சமயத்தில், அது தொடர்பான பின்கதவு வேலைகளைத் தரப்புக்கள் செய்வதற்கு இடம் அளிக்கும் விதத்தில் அதனை 24 மணி நேரத்திற்கு சபாநாயகர் தள்ளிப்போட்டு இருக்கின்றார். இந்த முடிவு நியாயமானதுதானா, நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைவானதுதானா என்று கேள்விகள் எழாமல் இல்லை.

இன்று காலை நாடாளுமன்றக் கட்சிகளின் தலைவர்களுக்காக சபாநாயகர் கூட்டிய கூட்டத்தில் இந்த விடயம் சர்ச்சைக்குள்ளான பின்புலத்திலேயே இத்தகைய முடிவை சபாநாயகர் அறிவித்திருக்கின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட எதிர்க்கட்சிகள் இந்த தெரிவை உடனடியாக – இன்று முதல் வேலையாக – சபையில் முன்னெடுப்பதற்கு வற்புறுத்திய போதிலும், தரப்புகளுக்கு 'ஹோம் வேர்க்' செய்வதற்கு நேரம் அளித்து விவகாரத்தை நாளை காலை வரை தள்ளிப் போட்டிருக்கிறார் சபாநாயகர்.

இனி என்ன? குதிரை பேர விவகாரம் – ஓட்டம் –நாளை காலை வரை சூடுபிடிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

நாடாளுமன்றத்தில் இப்போது குழப்ப நிலைமை. அரசுக்குப் பெரும்பான்மை இருக்கின்றதா? என்பதில் சந்தேகம். யார் அரசுடன், யார் எதிர்த் தரப்பில் என்பதில் எல்லாம் பெரும் சந்தேகங்கள் உண்டு.

இந்த நிலையில் அந்தப் பெரும்பான்மை பற்றிய மதிப்பீட்டைச் செய்வதற்கான முதல்அமிலப் பரீட்சை இந்தப் பிரதி சபாநாயகர் தெரிவு. இதில் எதிரணித் தரப்பு நிறுத்தும் வேட்பாளர் வென்றுவிட்டால், இப்போது மதில் மேல் பூனையாக நிற்கும் ஆளும் தரப்பு எம்.பிக்கள் பலர் எதிரணிப் பக்கம் பாய்ந்து விடுவர். ஏற்கனவே வெற்றிடமாகத் தொடங்கியுள்ள ஆளும் தரப்புக் கூடாரம் வெறுமையாகி விடும்.

அதனால், இந்த அமிலச் சோதனைக்குள் சிக்காமல் நழுவப் பார்க்கின்றது ஆளும் தரப்பு. இந்தப் பிரதி சபாநாயகர் பதவி சுதந்திரக் கட்சிக்கே உரியது, இந்த நாடாளுமன்றத்தின் ஆரம்பத்தில் அப்படித்தான் தீர்மானிக்கப்பட்டது, சு.க. ஆளும் கூட்டமைப்பிலிருந்து இப்போது வெளியேறிவிட்டாலும் அந்தப் பதவி அக்கட்சிக்கே உரியது என்பதால் அக்கட்சியே அதற்கான வேட்பாளரை நிறுத்த வேண்டும், நாங்கள் நிறுத்த மாட்டோம் என்று ஆளும் தரப்பு மெல்ல ஜாகா வாங்கப் பார்ப்பதாக – போட்டியிலிருந்து நழுவப் பார்ப்பதாக – தெரிகின்றது.

சு.க. என்ன செய்யப்போகிறது என்பது இன்னும் உறுதியாகவில்லை.

ஆனால் பிரதான எதிரணியான ஐக்கிய மக்கள் சக்தி பெரும்பாலும் தனது வேட்பாளரை – அநேகமாக இம்தியாஸ் பாக்கீர் மாக்காரை – இந்தப் பதவிக்கு – இறக்கும் எனத் தெரிகிறது. இப்போதைய அரசின் எதிர்காலத்தை – தலைவிதியை – தீர்மானிக்கும் அல்லது போக்கைக் கோடி காட்டும் கட்டியமாக இந்தத் தெரிவு அமைய இருப்பதால், பெரும்பாலும் எம்.பிக்கள் அனைவரும் நாளை காலையில் சபையில் பிரசன்னமாகி இருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. வயோதிபத்தினால் தளர்ந்து, சபை அமர்வுகளைப் பெரும்பாலும் தவிர்த்து வரும் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் போன்றோர் கூட நாளை சபைக்குக் கூட்டி வரப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# காலிமுகத்திடல் போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர்களுக்கு இலவச பஸ் சேவை!

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

அரசாங்கத்துக்கு எதிராக காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் 26 ஆவது நாளாக இன்றும் (புதன்ழமை) தொடர்கிறது.

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட தற்போதைய அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதேநேரம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி அலரி மாளிகைக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்று 8 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தப் போராட்டத்தில் இளைஞர்கள் சிலர் தொடர்ச்சியான உண்ணாவிரதத்திலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர்களுக்கு இலவச பஸ்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார். அதற்கமைய அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்கு நாட்டில் எங்கிருந்தும் இலவசமாக பஸ்களை வழங்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் எதிர்வரும் காலங்களில் நாடாளுமன்ற வளாகத்தைச் சுற்றி பஸ்களை முற்றுகையிடவும் தொழிற்சங்கம் தீர்மானித்துள்ளது.

# அவசர மானியமாக சீனா மேலும் 30 கோடி யுவான்!

அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்வதற்காக இலங்கைக்கு மேலும் 30 கோடி யுவான் நிதியை அவசர மானியமாக சீனா வழங்கவுள்ளது.

அவசரமாக மருந்து, உணவு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்வதற்காகவே இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய, நெருக்கடி நிலைமையை நிர்வகிப்பதற்கு சீனாவினால் இலங்கைக்கு வழங்கப்படும் அவசர மானிய தொகை சுமார் 50 கோடி யுவானாக அதிகரிக் கும் என இலங்கைக்கான சீனத் தூதரகம் டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளது.

# மருந்துப் பொருள் கொள்வனவு; முறையிட தொலைபேசி இலக்கம்

மருந்துப் பொருள்களை கொள்வனவு செய்வதில் ஏதேனும் சிக்கல் இருப்பின் 1999 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து அறிவிக்குமாறு பொதுமக்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

# இலங்கை பெண் அகதி வீட்டினுள் நுழைந்த தமிழக பொலிஸ் அதிகாரி

இலங்கை பெண் அகதி வீட்டுக்குள் இரவில் நுழைந்த பொலிஸ் அதிகாரியைத் தற்காலிக பணியிடை நீக்கம் செய்து தமிழக மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் கார்த்திக் உத்தரவிட்டார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் தனுஷ்கோடி கடல் வழியாக தமிழகத்துக்கு பைப்பர் படகில் அகதியாக வரும் இலங்கைத் தமிழர்கள் 80 பேரை பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்கு பின் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இலங்கையில் இருந்து மார்ச் 22 ஆம் திகதி மர்மப் படகில் வந்த ஓர் இளம்பெண் உட்பட 6 பேர் தனுஷ்கோடி வந்தனர். மெரைன் பொலிஸாரின் விசாரணைக்கு பின், மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கணவரை பிரிந்த அப்பெண் குழந்தைகளுடன் தங்கியுள்ளார்.

அந்தப் பெண்ணிடம் பழகி வந்த மண்டபம் மெரைன் பொலிஸ் அதிகாரி அன்பு, கடந்த 2 நாள்களுக்கு முன் நள்ளிரவு மது போதையில் வீட்டிற்குள் புகுந்து அப்பெண்ணிடம் தவறாக நடக்க முயன்றார். அப்பெண் மறுத்ததையடுத்து அன்பு அங்கிருந்து தப்பி சென்றார்.

இது தொடர்பாக அந்தப் பெண் மற்றும் அப்போது முகாமில் பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸார் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் அன்புவிடம், மெரைன் ஏடிஎஸ்பி பாலகிருஷ்ணன் தலைமையில் பொலிஸார் விசாரித்தனர். விசாரணை அறிக்கை படி மாவட்ட பொலிஸிற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்ட அன்புவை தற்காலிக பணியிடை நீக்கம் செய்து ராமநாதபுரம் மாவட்ட கண்காணிப்பாளர் கார்த்திக் உத்தரவிட்டார். பொருளாதார நெருக்கடியால் உணவின்றி அகதியாகத் தமிழகம் வந்த இலங்கை தமிழ் பெண்ணிடம் மெரைன் பொலிஸ் அதிகாரி மது போதையில் தவறாக நடக்க முயன்ற சம்பவம் மண்டபம் அகதிகள் முகாமில் வசிக்கும் இலங்கை தமிழர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

# மனைவியை கொலை செய்த கணவன் பொலிஸில் சரண்!

அக்மீமன, அங்கொக்காவல பிரதேசத்தில் கணவன் ஒருவர் தனது மனைவியை கத்தியால் குத்தி கொலை செய்துள்ளார்.

குடும்ப தகராறு காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த கொலை சம்பவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் அங்கொக்காவல பகுதியைச்சேர்ந்த 36 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொலையை செய்த சந்தேக நபர் அக்மீமன பொலிஸில் சரணடைந்ததன் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அக்மீமன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மரியுபோல் தொழிற்சாலை மீது பயங்கர தாக்குதல்

# கைப்பற்றிய உக்ரைன் பகுதிகளை ரஷ்யாவுடன் இணைக்க முயற்சி

## 10 லட்சம் மக்களை சட்ட விரோதமாக கடத்தினர் என ஜெலன்ஸ்கி குற்றச்சாட்டு

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்த போர் தீவிரமடைந்துள்ளது. குறிப்பாக, மரியுபோல், கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனை கைப்பற்றும் முயற்சியில் ரஷ்ய படைகள் தீவிரமாக போரிட்டு வருகின்றன. மரியுபோலில் உள்ள இரும்பு தொழிற்சாலையை தவிர, மற்ற அனைத்து பகுதிகளையும் ரஷ்யா தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. இதனால், தொழிற்சாலை உள்ள பதுங்கு குழியில் இருந்து உக்ரைன் படைகள் தாக்குதல் நடத்தினர். இந்த பதுங்கு குழியில் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் தஞ்சம் புகுந்து இருந்தனர். அவர்களை வெளியேற்றும் முயற்சியில் ஐ.நா. உள்ளிட்ட அமைப்புகள் ஈடுபட்டன.

இதன் பலனாக கடந்த சில நாள்களாக தொழிற்சாலையில் இருந்து பொதுமக்கள் பாதுகாப்புடன் இடம் பெயர்ந்து வருகின்றனர். பதுங்கு குழியில் சுமார் 500க்கும் மேற்பட்ட உக்ரைன் வீரர்கள், குழந்தைகளின் சடலங்கள் அழுகிய நிலையில் உள்ளன என கூறப்படுகிறது. இந்நிலையில், இந்த தொழிற்சாலைக்குள் ரஷ்ய படைகள் நேற்று நுழைந்து தாக்குதல் நடத்தின. ரஷ்யா கட்டுப்பாட்டில் உள்ள தெற்கு கெர்சனை சுதந்திர குடியரசு நாடாக அறிவிக்க ரஷ்யா திட்டமிட்டு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதற்காக, இங்குள்ள மேயர்கள், உள்ளூர் மக்கள் பிரதிநிதிகள் கடத்தப்பட்டு உள்ளனர் எனவும் இணையம் மற்றும் செல்போன் சேவை துண்டிக்கப்பட்டு உள்ளதாகவும் கூறப்படுகிறது. ஏற்கனவே, இங்கு ரஷ்யாவின் ரூபிள் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், ரஷ்ய பள்ளி பாடத்திட்டமும் விரைவில் திணிக்கப்பட உள்ளதாகவும் கூறப்படுகிறது. ரஷ்யாவின் தாக்குதலால், உக்ரைன் தலைநகர் கீவ் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் இருந்து இதுவரை 50 லட்சம் மக்கள் அண்டை நாடுகளுக்கு இடம் பெயர்ந்து உள்ளனர்.

இதில், 2 லட்சம் குழந்தைகள் உட்பட 10 லட்சம் மக்கள் உக்ரைனில் இருந்து ரஷ்யாவுக்கு வந்துள்ளனர் என ரஷ்யா பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறுகையில், 'ரஷ்ய படைகள் உக்ரைன் மக்களை, ரஷ்யா அல்லது ரஷ்யா கட்டுப்பாடு பகுதிகளுக்கு சட்ட விரோதமாக அழைத்து சென்றுள்ளன' என்று குற்றம்சாட்டி உள்ளார். இதை ரஷ்யா அதிபர் மாளிகை மறுத்து உள்ளது. இதற்கிடையே, மரியுபோல் இரும்பு தொழிற்சாலை, கருங்கடலில், கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனில் ரஷ்யா தாக்குதல்களை தீவிரப்படுத்தி உள்ளது. கருங்கடலில் அருகே உள்ள ஒடேசா மற்றும் கார்கிவ்வில் ரஷ்யா கடுமையான ஏவுகணை தாக்குதலை நடத்தி உள்ளது. இதில் ஒரு சிறுவன் கொல்லப்பட்டான். இந்த பகுதிகளையும் பிடித்த பிறகு, இந்த மாத இறுதியில் கிழக்கு உக்ரைனின் பெரும் பகுதியை தனது நாட்டுடன் இணைக்கவும், மற்ற பகுதிகளை தனி குடியரசாக அறிவிக்கவும் ரஷ்யா திட்டமிட்டு இருப்பதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

### புடினுக்கு ஒப்ரேஷன்: கைமாறும் அதிகாரம்?

ரஷ்ய அதிபர் புடின் வயிற்று புற்று நோய், பார்கின்சன் நோய் மற்றும் ஸ்கிசோ ஆபெக்டிவ் பிரச்சினையால் கடந்த 18 மாதங்களாக பாதிக்கப்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது. இதனால்தான் அவருடைய உடலின் வெளி தோற்றத்தில் பல மாற்றங்கள் காணப்படுகின்றன என கூறப்படுகிறது. சமீபத்தில் மட்டும் 35 முறை புற்றுநோய் மருத்துவரிடம் புடின் பரிசோதனை செய்துள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில், புடினுக்கு புற்றுநோய் அறுவை சிகிச்சை செய்யப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இதனால், அவர் சில காலம் எந்த பணிகளையும் மேற்கொள்ள முடியாது என்பதால், அனைத்து அதிகாரத்தையும் அந்நாட்டு பாதுகாப்பு கவுன்ஸில் செயலாளரான நிகோலாய் பட்ருஷோவிடம் ஒப்படைப்பதாக அமெரிக்காவின் நியூயார்க் போஸ்ட் அறிக்கை வெளியிட்டுள்ளது. இதுகுறித்து ரஷ்யா தரப்பில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.



### பலவீனமானது ரஷ்ய ராணுவம்

பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகம் டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில், 'உக்ரைன் மீதான போரில் இழப்புகளைச் சந்தித்த பின்னர் ரஷ்ய ராணுவம் இப்போது பொருள் ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் கணிசமாக பலவீனம் அடைந்துள்ளது. உக்ரைனில் இதன் படைகளால் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை' என்று கூறி உள்ளது.

### உக்ரைன் நாடாளுமன்றத்தில் பிரிட்டன் பிரதமர் உரை

பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் உக்ரைன் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றினர். இங்கு உரையாற்றும் முதல் உலக தலைவர் ஜான்சன் ஆவார். இதில் ஜான்சன் பேசுகையில், 'இது உக்ரைனின் மிகச்சிறந்த தருணம். கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள், ஸ்டோர்மர் எதிர்ப்பு விமான அமைப்புகளை பிரிட்டன் வரும் வாரங்களில் உக்ரைனுக்கு அனுப்புவோம்' என்று தெரிவித்தார்.

---

பாகிஸ்தானில் 'பொம்மை' ஆட்சியை நடத்தும் அமெரிக்கா

# ஜோ பைடனை மீண்டும் தாக்கிய இம்ரான் கான்



முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக வழக்குகள் போடப்படும் நிலையில், பாகிஸ்தானில் பொம்மை ஆட்சியை அமெரிக்கா நடத்துவதாக நேரடியாக தாக்கி பேசியுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன் சவுதி அரேபியாவின் மதீனாவிற்கு பாகிஸ்தான் பிரதமர் பொஸ் ஷெரீப் மற்றும் அவரது தூதுக்குழுவினர் சென்றனர். அப்போது அவர்களை பார்த்து அங்கிருந்த பாகிஸ்தானை சேர்ந்த சிலர், 'திருடர்கள், துரோகிகள்' என்று கோஷமிட்டனர். இவர்கள் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் ஆதரவாளர்கள் என்பது தெரியவந்தது.

அதையடுத்து சவுதி அரேபியா பொலிஸார், பாகிஸ்தானை சேர்ந்த 10க்கும் மேற்பட்டோரை கைது செய்தனர். இவர்கள் இம்ரான்கானின் உத்தரவின் பேரில், மதீனாவில் பிரதமருக்கு எதிராக கோஷம் எழுப்பியதாக கூறப்பட்டது. மேலும், இம்ரான் கான் உட்பட 150க்கும் மேற்பட்டோர் மீது பாகிஸ்தானின் பைசலாபாத் நகர் பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். அதனால், இம்ரான் கான் எந்த நேரத்திலும் கைது செய்யப்படுவார் என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரானா சனாவுல்லா சார்பில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் தனியார் சனலுக்கு பேட்டியளித்த இம்ரான் கான், 'ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரை, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் சதிசெய்து பதவி நீக்கம் செய்தார்.

அவர் தற்போது பொம்மை அரசை அமைத்துள்ளார்' என்று கூறினார். முன்னதாக கடந்த சில நாள்களுக்கு முன் பாக்ஸ் நியூஸ் நிகழ்ச்சியில் பங்கேற்ற அமெரிக்க பாதுகாப்பு ஆய்வாளர் டாக்டர் ரெபேக்கா கிரான்ட்டின் அளித்த பேட்டியில், 'பாகிஸ்தான் உக்ரைனை ஆதரிக்க வேண்டும்? ரஷ்யாவுடனான ஒப்பந்தங்களை ரத்து செய்ய வேண்டும். சீனாவுடனான உறவை குறைக்க வேண்டும். அமெரிக்க எதிர்ப்புக் கொள்கைகளை நிறுத்த வேண்டும்' என்று இம்ரான் கானுக்கு எதிராக பேசியிருந்தார். அதன் தொடர்ச்சியாக தற்போது அமெரிக்காவை இம்ரான் நேரடியாக தாக்கி பேட்டி அளித்துள்ளார்.

---



# பொக்ரானில் பீரங்கி பரிசோதனை

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சல்மர் மாவட்டத்தில் உள்ள பொக்ரானில் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட ஏ.டி.ஏ.ஜி.எஸ். எனப்படும் நவீன ஹோவிட்சர் ரக பீரங்கி பரிசோதனை ஏப்ரல் 26ஆம் திகதி முதல் மே 2ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் நடத்தப்பட்டு அதில் வெற்றியும் கிடைத்துள்ளது. இந்திய ராணுவத்தின் பீரங்கிகளை நவீனப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த திட்டத்தில் ஈடுபட்டு உள்ள ஒன்றிய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி கழகம் (டி.ஆர்.டி.ஓ.) இதனை உறுதிப்படுத்தி உள்ளது. இந்த ஹோவிட்சர் ரக பீரங்கியை டி.ஆர்.டி.ஓ. மேம்படுத்தி உள்ள நிலையில், பாரத் போர்ஜ் மற்றும் டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் ஆகிய நிறுவனங்கள் இவற்றை ராணுவ உபயோகத்திற்காக வருங்காலங்களில் உற்பத்தி செய்ய உள்ளன. இதனால், போபர்ஸ் ஹோவிட்சர்களுக்கு பதிலாக இந்திய ராணுவ பீரங்கிகளின் படை வரிசையில் இந்த ரக பீரங்கிகள் முக்கிய இடம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

# உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குலை கண்டிக்கிறோம் டென்மார்க் பிரதமர்



உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஒரு தலைபட்சமான தாக்குதலை கண்டிக்கிறோம் என டென்மார்க் பிரதமர் தெரிவித்துள்ளார். உக்ரைனில் நிலவும் சூழல் தொடர்பாகவும் அங்கு பொதுமக்களின் மீது நடைபெறும் தாக்குதல் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது எனவும் டென்மார்க் பிரதமர் மெட்டே பிரட்ரிக்சென் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சிங்கள மக்களுக்கும் உதவ முன்வாருங்கள்! உலகத் தமிழருக்கு சீமான் அழைப்பு விடுப்பு



இலங்கை அரசின் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள ஈழச்சொந் தங்களுக்கும், சிங்கள மக்களுக்குமான துயர்துடைப்புப் பணிகளுக்குப் பொரு ளுதவிகள் வழங்குங்கள் என உலகத் தமிழ் மக்களிடம் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை இனவாத அரசாங்கத்தின் 30 ஆண்டுகால இனவழிப்புப்போர் காரணமாக அந்நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடியில் ஈழச் சொந்தங்கள் மட்டுமல்லாது, சிங்கள மக் களும் சிக்குண்டு சொல்லொணாத் துய ரத்திற்கு ஆளாகியுள்ள நிலையில், அங் கிருந்து வரும் செய்திகள் பெருங்கவலை அளிக்கின்றன.

ராஜபக்ஷ அரசுக்கு எதிரா கக் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள மக்கள் இரண்டு மாதகாலத் திற்கும் மேலாகத் தொடர்ச்சி யாகப் போராடி வரும் நிலை யில், போராடும் மக்கள் மீது அடக்குமுறையை ஏவிவிட்டும், துப்பாக்கிச்சூடு நடத்தியும் அரச வன்முறையைக் கட்டவிழ்த்து விடுகிறது கொடுங்கோல் சிங்கள அரசு.

அரைநூற்றாண்டு கால மாக தமிழின மக்கள் அனுபவித்து வந்த கொடுமைகளின் வலியையும், அரசதி காரத்தின் கொடுங்கோன்மையையும் தற்போது சிங்களப்பொதுமக்களும் மெல்ல மெல்ல உணரத் தொடங்கியுள் ளனர். அதன் வெளிப்பாடே, போராட்டக் களங்களில் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் பெயர் சிங்கள மக்களால் உச்சரிக்கப்படுவதும், புலிகளின் ஆட்சியின்கீழ் இருந்தி ருந்தால் இந்நிலை வந்திருக்காது என வெளிப்படும் அம்மக்களின் எண்ண வோட்டமுமாகும்.

மண்ணையும், மக்களையும் காக்க, இன எதிரிகளோடு ஆயுதமேந்திச் சண் டையிடும் விடுதலைக்கான மறப்போரி லும் அறத்தைக் காத்து, சத்தியத்தின் திருவுருவாய் நின்ற உன்னதத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களது வழியில் வந்த நாம் துன்பப்படும் மக்கள் எவராயினும், எவ்விதப்பாகுபாடும் பாராமல் அவர்களுக்கும் உதவிக்கரம் நீட்டி துயர்போக்க இயன்றதைச் செய்ய வேண்டியது நமது தார்மீகக் கடமை யாகும்.

அதுவே தமிழரின் மாண்பு, நமது முன்னோர்கள் வகுத்துத் தந்த உயர் நெறிக்கோட்பாடாகும். இன்றைக்கு தமிழர்களோடு சேர்ந்து சிங்கள மக்க ளும் இன்னல்களுக்கு ஆளாகி நிற்கும் வேளையில், சிங்கள மக்களின் துன் பத்தில் நாம் ஒருபோதும் மகிழ்வடைய வில்லை. அவர்களுக்கும் சேர்த்தே உதவ நினைக்கிறோம்.

ஏனென்றால், தமிழர்கள் ஆகப் பெரும் உயிர்மநேயர்கள், அறத்தின் பக்கம் நிற்பவர்கள். ஆனால், தமிழர்கள் நாங்கள் துன்பப்பட்டு நிற்கும் வேளை யில், சிங்கள இன மக்கள் நியாயத்தின் பக்கம் நிற்காது, எம்மினச்சாவைக் கொண்டாடியதுதான் சகிக்க முடியா வரலாற்றுப்பெருந்துயரம்.

இருந்தபோதிலும், அவர்களுக்கும் இத்தருணத்தில் உதவிக்கரம் நீட்ட எண்ணுகிறோம். இலங்கை அரசின் வாயிலாக இந்திய அரசு செய்யும் உதவிகள் ஒருபோதும் தமிழர்களுக்கும் போய் சேராது. ஆகவே, நாமே நேரடி யாகத் துயர்துடைப்பு உதவிகளைச் செய்யத் திட்டமிடுகிறோம். அந்நிலத்தில் வாழும் இரு இனத்தின் மக்களும் கடுமை யான பொருளாதார நெருக்கடிக்கு ஆட்பட்டு, பசியிலும், கொடும் வறுமை யிலும் வாடி வருகிற தற்போதைய நெருக்கடிமிகு சூழலில், அம்மக்களது துயரத்தைப்போக்கும் முன்னெடுப்பை நாம் தமிழர் கட்சி மேற்கொள்ள விருக்கிறது.

அதுசமயம், இலங்கை அரசின் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள ஈழத்துச்சொந்தங்கள் மற்றும் சிங்கள மக்களுக்கு உதவுவதற்காக மாநிலம் முழுமைக்கும் பொருள்கள் சேகரிக்கப் பட்டு, அவர்களுக்கு நேரடியாகக் கொண்டுபோய் சேர்க்கப்படவிருக்கிறது.

ஆகவே, அரிசி, பருப்பு, எண்ணெய் வித்துகள், தானியங்கள், உலர் உணவுப்பொருள்கள் உள்ளிட்ட துயர்துடைப்புக்கான அத்தியாவசியப் பொருள்களை, சென்னை, வளசர வாக்கத்தில் அமைந்துள்ள நாம் தமிழர் கட்சியின் தலைமை அலுவலகமான இராவணன் குடிலுக்கு அனுப்பியோ, நேரடியாகவோ தந்து மக்களின் துயர்போக்க தங்களது பங்களிப்பைச் செலுத்த வேண்டுமெனக் கோருகிறேன். - என்று உள்ளது.

## அட்சய திருதியை நாளில் தமிழகத்தில் 18 தொன் தங்க நகைகள் விற்பனை

அட்சய திருதியை தினத் தன்று நகை வாங்குவது தொடர்பான நம்பிக்கை மக் களிடையே நிலவுகிறது.

சென்னை உள்ளிட்ட தமிழகம் முழுவதும் உள்ள முக்கிய நகரங்களில் நகைக்கடைகளில் தங்கம் மற் றும் வெள்ளிப்பொருள்களை வாங்க நேற்றைய அட்சய திரு தியை நாளில் காலையில் இருந்தே கூட்டம் அதிகமாக இருந்தது.

சென்னையிலும் நேற்று அதிகாலை முதலே நகைக் கடைகளில் விற்பனை பர பரப்பாக நடைபெற்றது. வாடிக்கையாளர்களை கவர பல்வேறு சலுகைகளும், தள் ளுபடிகளும் அறிவிக்கப்பட் டிருந்தன.

அட்சய திருதியை விற் பனை குறித்து சென்னையில் நகை வியாபாரிகள் சங்கத் தலைவர் ஜெயந்திலால் ஜிலானி கூறும்போது, அட்சய திருதியை முன்னிட்டு வழக்க மான உற்சாகத்துடன் பொது மக்கள் நகைகளை வாங்கி சென்றனர். அதுவும் கடந்த ஆண்டு அட்சய திருதியை நாளில் இருந்ததை விட தற்போது ஒரு பவுனுக்கு இரண்டாயிரத்து 424 ரூபாவும், கிராமுக்கு 303 ரூபாவும் விலை அதிகரித்து உள்ளது. ஆயினும், நகைக் கடைகள் காலை 5 மணிக்குதி றக் கப்பட்டதும் பொதுமக்கள் காலையிலேயே கடைகளுக்கு ஆர்வமுடன் வந்து நகைகளை வாங்கி சென்றனர்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த 2 ஆண்டுகளாக இருந்ததை விட நடப்பாண்டில் வழக்கமான உற்சாகத்துடன் பொதுமக்கள் வந்து நகைகளை வாங்கி சென்றனர்.

அட்சய திருதியை நாளில் நகை வாங்க வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புவதால் அவர்கள் தகுதிக்கு தகுந்தார் போன்று 2 கிராம் முதல் 10 பவுண் வரை நகைகளை வாங்கி சென்றனர்.

இதனால் வியாபாரிகள் எதிர் பார்த்தது போன்று வியாபாரம் நடந்தது, என்று தெரிவித்தனர்.

சென்னையை சேர்ந்த பிரபல நகைக்கடை உரிமை யாளர்களின் கருத்துப்படி, தமிழகத்தில் அட்சய திருதியை முன்னிட்டு ஒரு நாளில் சுமார் 16 தொன் தங்கம் விற்ப னையாகும் என்று எதிர்பார்க் கப்பட்டபோதும், அது ஒரே நாளில் 9 ஆயிரம் கோடி மதிப்பில் 18 தொன் தங்கம் விற்பனை செய்யப்பட் டுள்ளதாகத் தெரியவரு கிறது.

## தே.மு.தி.க. சார்பில் இலங்கை மக்களுக்கு 5 லட்சம் ரூபா நிதி உதவி அளிக்கப்படுகிறது



பொருளாதார நெருக் கடியில் சிக்கி தவிக்கும் இலங்கை மக்களுக்கு உத விகள் செய்ய அனைவரும் முன்வர வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார். இலங்கை மக்களுக்கு உதவிடும் வகையில் நிதி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்ட மு.க.ஸ்டாலின், தி.மு.க. சார்பில் ஒரு கோடி ரூபா நிதி வழங்கப்படும் எனவும், தி.மு.க. எம்.எல். ஏக்கள் தங்களது ஒரு மாத சம்பளத்தை வழங்குவார் கள் எனவும் தெரிவித்தி ருந்தார். இந்த நிலையில் இலங்கை மக்களுக்கு உதவி செய்ய 5 லட்சம் நிதி உதவி வழங்கப்படும் என்று தே.மு.தி.க. தலைவர் விஜய காந்த் தெரிவித்துள்ளார். இது தொடர்பான அறி விப்பை டுவிட்டரில் இன்று விஜயகாந்த் வெளியிட் டுள்ளார்.

## கொடநாடு வழக்கில் ஜெயலலிதாவின் உதவியாளர் பூங்குன்றனிடம் மூன்றாவது முறையாக விசாரணை



தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு விசாரணை தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. மேற்கு மண்டல ஐ.ஜி. சுதாகர் தலைமையில் இந்த வழக்கு மறுவிசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

ஏற்கனவே இந்த வழக்கில் கைதானவர்கள் மற்றும் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டவர்கள் என 220க்கும் மேற்பட்டவர்களிடம் தற்போது மீண்டும் மறுவிசாரணை நடத்தப்பட்டு வருகிறது. மேலும் ஜெயலலிதாவின் தோழி சசிகலாவிடமும் பொலிஸார் இரு நாள்கள் விசாரணை நடத்தினர்.

தற்போது விசாரணையானது நீண்டு கொண்டே செல்கிறது. ஜெயலலிதாவின் உதவியாளராக இருந்த பூங்குன்றனிடம் கடந்த மாதம் 29 மற்றும் 30 ஆம் திகதி களில் தனிப்படை பொலிஸார் விசா ரணை மேற்கொண்டனர். மேலும் சில கேள்விகளை எழுப்பி அதற்கான பதில் களை பெற வேண்டியிருந்ததால் பூங் குன்றனை இன்று மீண்டும் ஆஜரா கும்படி பொலிஸார் கூறி இருந்தனர்.

அதன்படி பூங்குன்றன் கோவை காவலர் பயிற்சி மையத்துக்கு வந்தார். அவரிடம் ஐ.ஜி. சுதாகர் தலைமை யிலான பொலிஸார் விசாரணை நடத்தினர். கொடநாடு எஸ்டேட் குறித்தும், ஜெயலலிதாவை சந்திக்க அங்கு அடிக்கடி வந்து சென்றவர்கள் பற்றியும், அங்கு நடைமுறையில் இருந்த செயல்பாடுகள், பணியாற்றிய நபர்கள் குறித்தும் விசாரணை நடத்தினர்.

## அக்கினி நட்சத்திரம் இன்று ஆரம்பம்; அனல் காற்று வீசும் என எச்சரிக்கை

தமிழகத்தில் கோடை வெயில் உக்கிரமடைந்துள்ள நிலையில் அக்கினி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் காலம் இன்று தொடங்குகிறது. வருகிற 28 ஆம் திகதி வரை இது நீடிக்கும் என்றும் 24 ஆம் திகதி வரை அனல் காற்று வீசும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நேற்று முன்தினம் 13 இடங்களில் 100 பாகையைத் தாண்டி வெயில் கொளுத்தியது. அக்கினி நட்சத்திரம் ஆரம்பமாகிய நிலையில் வெயில் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக பகல் நேரத்தில் பொதுமக்கள் அத்தியாவசிய காரணங்களைத் தவிர வெளியில் வருவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், வெப்பத்தைத் தணிக்க இளநீர், மோர் உள்ளிட்ட இயற்கை பானங்க ளையும் போதியளவு நீரை அருந்துவதும் நல்லது என மருத்துவர்கள் அறிவுரை வழங்கியுள்ளனர்.

இந்தநிலையில், நேற்று கோவை சூலூர், உக்கடம், ஆத் துப்பாலம், குனியமுத்தூர், இராமநாதபுரம், மதுக்கரை உள்ளிட்ட பகுதிகளில் பலத்த மழையும் பெய்தது. தருமபுரி மாவட்டத்தின் ஜக்கம்பட்டி கிராமத்தில் கனமழை மற்றும் பலத்த காற்றின் காரண மாக மின்கம்பி அறுந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெப்ப சலனம் காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# சுவாமி விபுலாநந்த அடிகளாரின் ஜனன தின நிகழ்வு மட்டுநகரில்!







உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 130 ஆவது ஜனன தின நிகழ்வு நேற்று மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வு சுவாமி விபுலாநந்த அடிகளாரின் உருவச் சிலை அமைந்துள்ள நீரூற்றுப் பூங்கா வளாகத்தில் மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி ஆணையாளர் உ.சிவ ராஜா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பிரதம அதிதியாக கலந்து கொண்ட மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி முதல்வர் க. சத்தியசீலன் சுவாமியின் திரு உருவச் சிலைக்கு முதல் மலர் மாலையை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து. நிகழ்வில் கலந்து கொண்ட ஏனைய அதிதிகளால் சுவாமியின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன், பூக்கள் தூவி அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் தேசிய பாடசாலை மாணவிகளால் வெள்ளை நிற மல் லிகையோ பாடல் பாடப்பட்டது. அதிதி களினால் நினைவுப் பேருரைகளும் ஆற்றப்பட்டு ஜனனதின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாநகர சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பல ரும் கலந்து கொண்டு உணர்வு பூர்வ மாக அஞ்சலி செலுத்தினர்.

# கண்ணகை அம்பாளின் திருக்குளிர்த்திச் சடங்கு எப்போது? வைகாசி மாதத்தில் இரண்டு பூரணைகள் வருவதால் சர்ச்சை!

## தீர்த்துவைக்கிறார் சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள்





(காரைதீவு நிருபர் சகா)

வைகாசி பிறந்துவிட்டால் வடக்கு, கிழக்கின் பட்டி தொட்டியெல்லாம் பத்தினித்தெய்வமாம் கண்ணகை அம்பாளின் வைகாசிப்பொங்கல் – அதாவது திருக் குளிர்த்திச் சடங்கு – வைகாசிப் பூரணையில் நடைபெறுவது உலகமறிந்ததே.

ஆனால், இம்முறை தமிழ் வைகாசி மாதத்தில் இரண்டு பூரணை தினங்கள் வருகின்றன. முதலாவது பூரணை தினம் வைகாசி மாதம் முதலாம் திகதியிலும் (ஆங்கிலத்திற்கு மே 15ஆம் திகதி), இரண்டாவது பூரணை தினம் வைகாசிமாதம் 31ஆம் திகதியும் (ஆங்கிலத்திற்கு ஜூன் 14ஆம் திகதி) வருகின்றன.

இந்த இரு பூரணைதினங்களில் எதில் வைகாசிச் சடங்கை நடாத்துவதென்பதில் சர்ச்சை நிலவுகிறது.

இது தொடர்பாக காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம் மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக் குருக்களிடம் கேட்டபோது கீழ்வரும் விளக்கங் களைக்கூறினார்:–

இந்தவருடம் தமிழ் வைகாசி மாதம் இரண்டு பௌர்ணமி தினங்களுடன் அமைகிறது.

எமது சமயம்சார் வழிபாட்டு முறைகளில் ஆகமம்சார், ஆகமம் சாரா வழிபாடுகள் நடைபெற்றாலும் இரு வழிபாடுகளிலும் கால–நிர்ணயம் பெரும்பாலும் பஞ்சாங் கத்தின் அடிப்படையிலேயே நிகழ்வது வழமை.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி யோடு இணைந்து வருகின்ற நட்சத்திரம் அந்தமாதத்தில் சிறப் பிடம் பெறுகின்றது.

வழமையில் வைகாசியில் பௌர்ணமியும் அத னைத்தொட்டு விசாக நட்சத்திரமும் வருவது வழமை. எனவே வைகாசி விசாக உற்சவங் களும் வைகாசி பௌர்ணமியில் குளிர்ச்சியாடும் கண்ணகி ஆலயங்களும் கிட்டத்தட்ட ஒன்றாக வருவது கண்கூடு.

அதேவேளை, திதியை மையமாகக்கொண்டு அனுஷ்டிக்கப்படும் உற்சவங்கள் சாந்திரமாச உற்சவங் கள் எனவும் நட்சத்திரத்தை அடிப்படையாக கொண்டு அனுஷ்டிக்கப்படும் உற்சவங்கள் நட்சத்திர மாச உற்சவங்கள் எனவும் அழைக்கப்படும்.

கண்ணகி அம்மன் திருக்குளிர்ச்சி திதி அடிப்படையில் (வைகாசித்திங்கள் – வைகாசி பௌர்ணமி) அனுஷ்டிக்கப்படுகின்ற உற்சவம் என்பதை கவனத்தில் கொண்டால் ஒரு மாதத்தில் இரு நட்சத்திரங்களோ, இரு திதிகளோவந்தால் பிந்தியதையே உற்சவாந்தமாகக் கொள்ளவேண்டும்.(உற்சவாந்தம் – உற்சவம் அந்தம்)

ஜோதிட விதியின் அடிப்படையில் கண்ணகி அம் மன் திருக்குளிர்ச்சி இரண்டாவது பௌர்ணமியில் (ஜூன் 14 ஆம் திகதி) கொள்வதே சாலச் சிறந்தது..

ஒருமாதத்தில் இரு பௌர்ண மிகளோ, அமாவாசைகளோ வருமா னால் அது மலமாதம் அல்லது அதிதமாதம் என நீக்கப்படும் என்பது காலவிதானம் தரும் விதி.

ஆகவே நட்சத்திர அமைவினடிப் படையில் முதலாவது பௌர்ண மியோடு வரும் விசாகத்தை வைகாசி விசாகமாகவும், திதி விதி அமைவு அடிப்படையில் இரண்டாவது பௌர்ணமி கண்ணகி திருக்குளிர் சியாகவும் இரண்டு பஞ்சாங்கமும் கணித்துள்ளமையை உணர்ந்து செயற்படுவோம்.

அதன்படி,பொதுவாக கண்ணகை அம்பாளின் திருக்குளிர்த்திச்சடங்கு ஜூன் மாதம் 6ஆம் திகதி (வைகாசி 23ஆம் திகதி) ஆரம்பமாகி ஜூன் மாதம் 13ஆம் திகதி(வைகாசி30) அல்லது ஜூன் மாதம் 14ஆம் திகதி (வைகாசி31) திருக்குளித்திப் பாடலுடன் நிறைவடையும். – என்றார்.










# சர்வதேச ஊடக தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் ஊடகவியலாளர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி கவனவீர்ப்பு!

(க.கிருபாகரன்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும், ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும் சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு ஊடக அமையம் ஆகியன இணைந்து மட்டக்களப்பு காந்தி பூங்காவிலுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத் தூபியில் நடத்திய மெழுகுவர்த்தி ஏந்திய கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று மாலை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் வா.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இதுவரை காலமும் உயிர் நீத்த ஊடகவியலாளர்களின் நினைவாக மெழுகுவர்த்தி ஏந்தி, இரண்டு நிமிட நேரம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் வா.கிருஷ்ணகுமார் குறிப்பிட்டவை வருமாறு:-

காலங்காலமாக இலங்கையில் ஊடக அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுக் கொண்டிருப்பது கவலையளிக்கின்றது.

நாம் எதுவித தங்கு தடையுமின்றி ஊடகப் பணியினை மேற்கொள்ள அரசாங்கம் உரிய வழி வகைகளைச் செய்திட வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் மாவட்டத்திலுள்ள பெருமளவிலான ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## நாவுக்கரசர் குருபூசை நிகழ்வு திருக்கோவில் விநாயகபுரத்தில்






(காரைதீவு நிருபர் சகா)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் இணைந்து நடத்திய நாவுக்கரசு நாயனார் குருபூசை தின விழா திருக்கோவில், விநாயகபுரம், திருநாவுக்கரசு நாயனார் குரு குலத்தில் ஞாயிறு காலை 9.00 மணிக்கு சிவசிறி.அங்குசநாதக்குருக்கள் திரு முன்னிலையில் குருகுலப் பணிப்பாளர் கண.இராஜரெத்தினம் தலைமையில் இடம்பெற்றது. பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார். திருக்கோயில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து கொண்டனர். மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜ் நிகழ்விற்கான சகல ஏற்பாடுகளையும் செய்தார்.

## கிழக்கிலும் 3 வருடங்களின் பின்பு ஒன்று கூடிப் பெருநாள் தொழுகை



புனித நோன்புப் பெருநாள் தொழுகை அக்பர் ஜும்மா மஸ்ஜீத் ஏற்பாட்டில் 3 வருடங்களுக்கு பின்னர் அம்பாறை மாவட்டம் மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணிக்கு நடைபெற்றது. இதன் போது கலாநிதி அஷ்செய்க் எம். எல்.முபாறக் மதனி தொழுகை நடத்திப் பிரசங்கமும் நிகழ்த்தி னார். இதில் ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தின் நற்பிட்டிமுனை, கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று, பொத்துவில் உள்ளிட்ட முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் பெருநாள் தொழுகைகள் பரவலாக இடம்பெற்றன. கொவிட் இறுக்கத்தின் 3 வருடங்களுக்கு பின்னர் மேற்படி பகுதிகளில் இடம்பெற்ற பெருநாள் தொழுகைகளில் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்று கூடிக் கலந்துகொண்டிருந்தனர். கடந்த காலங்களில் கொரோனா அச்சுறுத்தல் உட்பட இதர காரணங்களினால் பெருநாள் தொழுகை கட்டுப்பாடுகளுடன் நாடு முழுவதும் இடம்பெற்றி ருந்தன.

நேற்று நாடளாவிய ரீதியில் இஸ்லாமியர்கள் தமது புனித நோன்புப் பெரு நாள் பண்டிகையை 3 வருடங்களின் பின்னர் சிறப்பாக அனுஷ் டிக்கின்றனர்.

# ராஜபக்‌ஷ குடும்பம் மீது கூறப்படும் பணமோசடி எவ்வித தொடர்பும் இல்லை என்கின்றார் நாமல்



ஒஸ்பென் மெடிக்கல் மற்றும் ஆஸ்திரேலியாவில் நடந்ததாகத் தெரிவிக்கப்படும் சந்தேகத்திற்குரிய பணமோசடி தொடர்பாகத் தமது குடும்பத்துக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என நாமல் ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை வைத்தியசாலையின் நிர் மாணப்பணியின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிப் பரிவர்த்தனைகள் தொடர்பான தகவல்களை சர்வதேச ஊடகமான ஏ.பி.சி. நியூஸ் செய்தி நிறுவனம் அம்பலப்படுத்தியுள்ளது.

மேற்படி வைத்தியசாலைக்கு உபகரணங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை வழங்கும் 1.88 கோடி டொலர் திட்டத்துக்கு ஒஸ்பென் மெடிக்கல் நிறுவனம் ஆஸ்திரேலிய அரசாங்கத்திடமிருந்து அனுமதியைப் பெற்றுள்ளது.

இலங்கையில் ஒஸ்பென் மெடிக்கலின் முதல் 21 லட்சம் டொலர் பரிவர்த்தனை பிரித்தானிய விர்ஜின் தீவுகளின் பதிவு செய்யப்பட்ட நிறுவனமான சேபர் வின் ஹோல்டிங்ஸ் இடையில் இடம்பெற்றுள் ளது. இலங்கையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் நிமல் பெரேராவுக்குச் சொந்தமான இந்த நிறுவனம் இலங்கையில் உள்ள ராஜபக்‌ஷ குடும்பத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளதாக ஊடகங்கள் வெளிப்படுத்தியுள்ளன. ராஜபக்‌ஷ குடும்பத்துடன் தொடர்பு வைத்திருந்த நிமல் பெரேரா என்ற இடைத்தரகருக்கு இந்த நிறுவனம் இரகசியமாக சொந்தமானது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பரிவர்த்தனை காரணமாக கடந்த 2016 ஆம் ஆண்டில், பண தூய்தாக்கல் குற்றச்சாட்டில் நாமல் ராஜபக்‌ஷவை கைதுசெய்ய அது வழிவகுத்ததாகவும் ஏ.பி.சி. நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் மேற்படி இரண்டு நிறுவனங்களுக்கு இடையேயான பரிவர்த்தனையில் எவ்வித சம்பந்தமும் கிடையாது என நாமல் ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கம் முன்வைத்த இந்த குற்றச்சாட்டு தொடர்பாக இன்னும் தான் நீதிமன்றத்துக்குச் செல்கிறேன் எனவும் இதில் யாருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கோண்டாவில் எழுதிரள் பணிமனையில் புத்தகத் திருவிழா சிறப்புற நடந்தது!





அனைத்துலக புத்தக தினத்தினை முன்னிட்டு சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் கடந்த ஏப்ரல் 29 முதல் இம்மாதம் மே 2 ஆம் திகதி வரை நான்கு நாள்கள் வரை சிறப்பான முறையில் யாழ்ப்பாணம் கோண்டாவிலில் அமைந்துள்ள எழுதிரள் பணிமனையில் புத்தகத் திருவிழா இடம்பெற்றது. ஈழத்து எழுத்தாளர்கள் மற்றும் அயல்நாட்டு எழுத்தாளர்களின் எண்ணுறுக்கும் மேற்பட்ட தலைப்புகளிலான நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமையுடன், வாசகர்கள் ஆர்வத்துடன் பங்கெடுத்திருந்தனர்.

புத்தகத் திருவிழாவின் ஆரம்ப நிகழ்வில் அறிந்திரன் ஆசிரியர் கணபதி சர்வனந்தா, அரசியல் ஆய்வாளர் சி.அ. ஜோதிலிங்கம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து சிறுவர்களுக்கான கடதாசி வேலைப்பாடுகள் பயிற்சி மற்றும் கதை சொல்லல் நிகழ்வுகளில் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண உதவிக் கல்வி பணிப்பாளர் செ.மகேஸ் மற்றும் றொபின்சன் ஆகியோரால் மேற் கொள்ளப்பட்டது. புத்தகத் திருவிழாவில் சிறுவர்களுக்கான சித்திரம் வரைவதற்கான பகுதி அனைவரினதும் கவனத்தையும் ஈர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## ரஞ்சன் விடுதலைக்காக விசேட குழு நியமனம்

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்காக போராடுவதற்காக விசேட குழுவொன்றை ஐக்கிய மக்கள் சக்தி நியமித்துள்ளது.

புதிய மகஸின் சிறைச்சாலையில் உள்ள ரஞ்சன் ராமநாயக்கவைச் சந்தித்துப் பேசியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திடம் பலமுறை கோரிக்கை விடுத்தும் அது இடம்பெறவில்லை எனத் தெரிவித்த சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவின் தலைமையில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# நெருக்கடிக்கு மத்தியில் பிரதமரால் வெளியிடப்பட்டுள்ள இணையத்தளம்!



மத்திய கலாசார நிதியத்தின் புதிய இணையதளம் மற்றும் யூடியூப் சனல் ஆகியன பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவால் நேற்று (செவ்வாய்க்கிழமை) முற்பகல் அலரி மாளிகையில் வைத்து இணையத்தில் வெளியிடப்பட்டது.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் நாட்டின் கலாசாரம் தொடர்பில் பிரசாரம் செய்வதும், சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பை அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும்.

மத்திய கலாசார நிதியத்தின் புதிய இணையத்தளத்தை அணுகலாம் மற்றும் 'எங்கள் பாரம்பரியம்' என்ற புதிய யூடியூப் சனலை அணுகலாம்.

மத்திய கலாசார நிதியம் இலங்கையின் கலாசார பாரம்பரியத்தை நிர்வகிக்கும் முன்னணி நிறுவனமாகும், மேலும் இலங்கையின் முக்கிய தொல்பொருள் தளங்களின் பாதுகாப்பு, ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், சுவரோவியங்கள் மற்றும் பிற தொல்பொருள்களைப் பாதுகாத்தல் மற்றும் தொல்லியல் துறையில் மனித வளங்களைமேம்படுத்துதல்ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இலங்கையின் கலாசார சுற்றுலாத்துறையை வழிநடத்தி இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு மத்திய கலாசார நிதியம் பங்களிப்பு செய்கிறது.

ஆரம்பத்தில் கலாசார முக்கோணத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்த நிறுவனம் ஆறு முக்கிய தொல்பொருள் தளங்களுடன் தொடங்கப்பட்டது மற்றும் அதன் பாரம்பரிய முகாமைத்துவ நடவடிக்கைகளை விரிவுபடுத்தி அதன் நடவடிக்கைகள் தீவின் பிற பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய, இதுவரை நாடளாவிய ரீதியில் 24 முக்கிய தொல்பொருள் தளங்களில் இந்த பாரம்பரியத்தை நிர்வகிப்பதற்கு மத்திய கலாசார நிதியம் பங்களித்து வருகிறது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.05.2022இல் வெளியிடப்பெற்றது.